**<u>சுருக்கம்</u>**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை – தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் – பல்வேறு நல உதவிகள் – செயல்படுத்துவதற்கான வழிகாட்டி நெறிகள்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந3) துறை,</u>**

அரசு ஆணை ( நிலை ) எண். 87 நாள்: 8.8.2008

படிக்கப்பட்டவை:

அரசாணை (நிலை) எண். 60, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 27.5.2008.

* * * * * *

**<u>ஆணை:</u>**

நரிக்குறவர்கள் இன்னும் நாடோடிகளாகவே வாழ்ந்து வருகின்றனர். மேலும் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் இவர்களை இன்னும் சென்றடைய இயலாத நிலை உள்ளது. இவர்களுக்கு கல்வி மற்றும் தொழில் புரிவதற்கான உதவி அளிக்கவும் அவர்களுக்கு பல்வேறு நல உதவிகளை வழங்குவதற்காகவும் அரசாணை (நிலை) எண். 60, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 27.5.2008–ன் படி தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் அமைக்கப்பட்டது. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், அரசு சார் உறுப்பினர்களாக 9 பேர்களும், அலுவல் சாரா உறுப்பினர்களாக 10 பேர்களையும் கொண்டு நரிக்குறவர் நல வாரியம் இயங்கி வருகிறது.

2. நரிக்குறவர் நலவாரியத்தில் பதிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும் என மேற்சொன்ன அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. அதன்படி நரிக்குறவர் நலவாரியத்தில் உறுப்பினர்கள் பதிவு செய்வது, நலத்திட்ட உதவிகளுக்காக விண்ணப்ப படிவங்கள், விண்ணப்பிக்கும் முறை குறித்த வழிமுறைகள் தொகுப்பினை இணைப்பில் கண்டுள்ளவாறு அரசு வெளியிடுகிறது.

4. இவ்வழிமுறைகள் தொகுப்பினை அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கும் அனுப்பி, வாரியத்தில் உறுப்பினர்களை பதிவு செய்து, நலத்திட்ட உதவிகள் வழங்கும் பணியினை முனைப்புடன் செயல்படுத்தி 15 தினங்களுக்கு ஒரு முறை நல வாரிய உதவிகள் வழங்கியமை குறித்த காலமுறை அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந. வாசுதேவன்,
அரசுச் செயலாளர்

<u>பெறுநர்:</u>
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை –5.
நரிக்குறவர் நலவாரியத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும்
(உறுப்பினர்–செயலர் மூலமாக).

<u>நகல்:</u>
பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சர் அலுவலகம், சென்னை –9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.